IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
O.S.NO:34/2013

**DEP OF WITNESS:** NAME: Chinnathambi Date:22.08.2019

**குறுக்கு விசாரணை:-**

நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க சம்மன் எதுவும் வரவில்லை. தரணியம்மாள் அழைத்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் கண்டுள்ள சங்கதிகள் தட்டச்சு செய்யப்பட்டிருந்ததில் கையெப்பமிட்டு அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. 1 ஏக்கர் 27 செண்டிற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து ரங்கநாத முதலியாருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது. எந்த ஆவணத்தின் அடிப்படையில் அவருக்கு கிடைத்தது என்று எனக்கு தெரியாது. 24.04.1991-ல் தரணியம்மாளுக்கு கிரயம் கொடுத்தார். கிரயம் கொடுக்கப்பட்ட சொத்தின் மேல் பகுதியிலும் கீழ் பகுதியிலும் தரணியம்மாளின் அப்பாவிற்கு சொந்தமானது. தெற்கில் ஜெயகுமார் என்பவரது நிலம் உள்ளது. வடக்கில் கமலாபுரம் என்ற ஊர் உள்ளது. வழக்கு சொத்தில் எத்தனை வீடுகள் உள்ளது என்று என்னால் சொல்ல இயலாது. ஜெயகுமார் வீட்டு மனைகளாக பிரித்து கல் போட்டுள்ளாரா என்று எனக்கு தெரியாது ஆனால் காலிஇடமாக உள்ளது. ரங்கநாதன் தரணியம்மாளுக்கு தாவா சொத்தினை எழுதிகொடுக்கவில்லை என்றும் அவ்வாறு எழுதிகொடுத்திருந்தால்கூட அந்த தேதியில் எழுதிகொடுப்பதற்கான உரிமை இல்லை என்றால் சரியல்ல. தரணியம்மாளுக்கு எழுதிகொடுக்கப்பட்டதாக சொல்லக்கூடிய ஆவணத்தில் நான் ஒரு சாட்சி என்பதால் நான் ஒரு சாட்சி என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தரணியம்மாள் தற்போது அவரது மகள் வீட்டில் உள்ளார். முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. எனக்கு தாவா சொத்தை பற்றி எதுவும் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read
over of the deponent and acknowledged
by her/him to be correct.

Sd/. A.CHELLAPANDIAN,
DISTRICT MUNSIF.